பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 29 செவ்வாய்க்கிழமை 11.06.2024 கதிர் 216

# வடக்கு கிழக்கு இணைந்த அலகில் அர்த்தமுள்ளதான அதிகாரப் பகிர்வு

## தமிழர்களின் எதிர்பார்ப்பு இதுவே என்று சஜித்திடம் தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்து



வடக்குகிழக்குமாகாணங்கள் இணைந்த ஓர் அலகிலே அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வையேதமிழ்மக்கள்எதிர்பார்க்கிறார்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸ ☞ 2

## இது இனி ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் மூலம் கிளறிவிட்டுப்போன ஒரு விடயத்திற்கு நேற்றுத் தெளிவான முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கின்றது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை காணி, பொலிஸ் அதிகாரங்கள் இன்றி நடைமுறைப் படுத்துவார் என்றுதான் சஜித் பிரேமதாஸவும் சொல்கிறார், வேண்டுமானால் நீங்களே அவரிடம் கேட்டு அதனை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் என்று ரணில் கூறியிருந்தார் என்று விக்னேஸ்வரன் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

நேற்று சஜித் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது செய்தியாளர்கள் அவரிடம் இது குறித்து நேரடியாகவே கேட்டனர். தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு வெளியே வந்த சஜித்திடம், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவீர்கள் ☞ 2

## போராட்டத்தை கைவிடும் தொடருந்து ஊழியர்கள்

போக்குவரத்து அமைச்சருடனான கலந்துரையாடலின் பின்னர், வேலை நிறுத்தத்தை கைவிட தொடருந்து தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள தொடருந்து ஊழியர்களுக்கும் அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று போக்குவரத்து அமைச்சில் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ரயில் சாரதிகளின் குற்றச்சாட்டுகளுக்கு ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில் பொதுமக்களுக்கும், அரசாங்கத்துக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த பணிப்புறக்கணிப்பு வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டதாக ரயில்வே திணைக்களத்தின் மேலதிக பொது முகாமையாளர் (நிர்வாகம்) திருமதி குசலானி டி சில்வா தெரிவித்தார்.

இதுபோன்ற செயலில் ☞ 8

நான் ஜனாதிபதியானதும்


## இந்த வருட இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தல்

### யாழ்ப்பாணத்தில் சஜித் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெற்றதும் இந்த வருட இறுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாச13ஆவது திருத்தச்சட்டத்தினை மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து அமுலாக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பிரபஞ்சம்வேலைத் திட்டத்தின் 228ஆவது கட்டமாக யாழ்ப்பாணம் - வடமராட்சி கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சுமார் 12 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். ☞ 2

## இலங்கை – இந்தியா இடையில் உறவை வலுவாக தொடர ரணில் – மோடி உறுதி



தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், இந்திய-இலங்கை உறவுகளை வலுவாக தொடர இருநாட்டுத் தலைவர்கள் மீண்டும் உறுதியளித்தனர்.

நரேந்திர மோடியின் பதவியேற்பு விழா பிற்பகல் புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் பிரமாண்டமான முறையில் இடம்பெற்றது. நரேந்திர மோடியின் விசேட அழைப்பின்பேரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இந்நிகழ்வில் இணைந்து கொண்டார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால், மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முயிசு, சீஷெல்ஸ் உப ஜனாதிபதி, மொரீஷியஸ் பிரதமர் ☞ 9

## இந்திய அமைச்சர் ஜெய்சங்கருடன் டில்லியில் ரணில் நேற்றுச் சந்திப்பு



புதுடில்லிசென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் இந்திய சிரேஷ்ட அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்திய முதலீட்டில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தித்திட்டங்களை துரிதமாக மீள ஆரம்பிப்பது குறித்து இங்கு ஆராயப்பட்டதோடு இந்த ☞ 2

## விவசாய நவீனமயமாக்கலுக்கு பங்களாதேஷ் ஆதரவு வழங்கும்



இலங்கையில் முன்னெடுக்கப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கு பங்களாதேஷ் ஆதரவளிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா ☞ 8

## வெற்றிபெற்றதும் அன்றிரவே நாடாளுமன்றைக் கலைப்போம்

### தேசிய மக்கள் சக்தித் தலைவர் அனுர உறுதி

ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் வெற்றிபெற்ற அன்றைய தினம் இரவே நாடாளுமன்றத்தினைக் கலைப்போம். மக்கள் ஆணையை இழந்த அந்தக் சட்டவாக்கத்துறையை அதன் பின்னர் ஒருநாள் கூடவைத்திருக்கப்போவதில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் ☞ 9

## மொட்டு கட்சி வேட்பாளர் பற்றி விரைவில் அறிவிப்பு வரும்

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இறுதி தீர்மானத்தை எடுத்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாட்டு மக்களுக்கு வெகுவிரைவில் அத்தீர்மானத்தை அறிவிப்பார் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்தார்.

பத்தரமுல்லயில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்க ☞ 2

## ஆசிரியர்கள் ஜூன் 26 அன்று சுகயீன விடுப்புப் போராட்டம்

நாடுமுழுவதும் ஜூன் 26 சுகயீன விடுமுறை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஊதிய முரண்பாடு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கைக்கு சமாந்தரமாக எதிர்வரும் 12ஆம் திகதி கண்டனப் போராட்டத்தை ஏற்பாடு செய்யவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்தார்.

## முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆளும் தரப்பால் வழங்கப்பட்டு வந்த 2500 ரூபா மாதாந்த கொடுப்பனவை 5000 ரூபாவாக அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர ☞ 2

## இனி இது .....

என்று மே தினக் கூட்டத்தில் தெரிவித்திருந்தீர்கள் அது காணி, பொலிஸ் அதிகாரங்களையும் உள்ளடக்கியதாஎன்றுசெய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு, அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டம் அப்படியே நடைமுறைப்படுத்தப்படும். அதில் மைனஸோ பிளஸோ இருக்காது என்று தெளிவாகப் பதிலளித்தார் சஜித். முன்னதாகத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களுடன் நடந்த பேச்சின் போதும் அவர் இதனை உறுதியாகத் தெரிவித்தார் என்று அறியமுடிகின்றது.

அதுமட்டுமல்ல, 13ஐ நடைமுறைப்படுத்தினாலும்கூட மாகாண சபைகளுக்கு நிதி அதிகாரம் இன்றி அது பயனற்ற கட்டமைப்புத்தான் என்பதையும் ஏற்றுக்கொண்டு தனது ஆட்சியில் மாகாணசபைகளுக்குநிதிஅதிகாரம் வழங்குவதில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் சஜித் தெரிவித்திருக்கிறார். இந்த விடயம் குறித்து அவர் இதற்கு முன்னர் தெரிவித்ததில்லை.

தெற்கில் இனவாதத்தின் தீவிரம் குறைந்திருக்கும் இந்தக் காலப் பகுதியே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நல்ல சூழல் என்று சஜித் தனது எண்ணத்தைத் தெரிவித்திருந்தார் என்பதையும் அறிய -முடிந்தது. அப்படியானால் மகாண சபைகளுக்கு நிதி அதிகாரம் வழங்கப்படுவது குறித்து அவர் சிங்கள மக்களிடமும் வெளிப்படையாகத் தெளிவாகச் சொல்லவேண்டும். இந்தத் தேர்தலின்போதே அதற்கான அங்கீகாரத்தை சிங்கள மக்களிடம் இருந்து பெறவேண்டும்.

ஏனெனில், ரணில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படத்தப் போகிறார் என்று கூறியபோது அரசமைப்புநகலைஎரித்துபிக்குகள் ஆர்ப்பாட்டம் செய்தமையையும் சிங்கள, பௌத்த பேரினவாத அரசியல்செய்யும்விமல்வீரவன்ஸ, சரத் வீரசேகர, உதய கம்பன்பில போன்ற அரசியலாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததையும் தெற்கு ஊடகங்கள்அதற்குஅளவுக்கதிகமான முக்கியத்துவம் வழங்கியதையும் மறந்துவிடமுடியாது. அதனால்சஜித் போன்ற ஜனாதிபதி வேட்பாளர்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்தவொரு நகர்வைக் குறித்தும் தமிழர்களின்ஆதரவைப்பெறுவதற்கு முன்பாக சிங்கள மக்களின் ஆதரவை, அங்கீகாரத்தைப் பெறுவதில்தான் அதிக அக்கறை, கவனம் செலுத்தவேண்டும்.

சிங்கள மக்களிடம்வெளிப்படையாக அங்கீகாரம் பெறப்படாத எந்தவொரு தீர்வு முயற்சியும் ஆட்சிக்கு வருவதற்காக தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றி வாக்குகளைத்திருடுவதற்கானமுயற்சியாகத் தான் கருதப்படும். எனவே சஜித் இந்தவிடயத்தில்வடக்கில்பணியாற்றுவதிலும்பார்க்கதெற்கில்பணியாற்றுவதும் இது பற்றித் தெற்கில் தனது கூட்டங்களில் அதிகளவில் பேசுவதும்தான் முக்கியம் என்று எனக்குப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடம் வலியுறுத்தப்பட்டது என்று தமிழ்அரசுக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்சுமந்திரன்தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சியின்தலைமைஅலுவலகத்தில் நேற்றுஇரவுநடைபெற்றஎதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸவுடனான சந்திப்பில் கலந்துகொண்டு விட்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:-

'யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் எங்களுடைய தமிழரசுக் கட்சியினருடன் பேச வேண்டும் எனக் கோரியதன் அடிப்படையில் இன்று (நேற்று) சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எங்களுடைய கட்சித் தலைவர் மாவைசேனாதிராஜாதலைமையில் நாங்கள் கலந்துகொண்டு தமிழ் மக்களுடையஎதிர்பார்ப்புசம்பந்தமாக அவருக்குவிளக்கினோம். அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக எங்களுக்கு இருக்கின்ற ஏமாற்றங்களைத் தெளிவுபடுத்தினோம்.

நாங்கள் போதாது என்று சொல்லுகின்ற 13ஆவது திருத்தத்தைக்கூட இப்போது இன்னமும் மோசமான நிலைக்குக் கடந்த கால ஆளும் தரப்புக்கள் கொண்டு வந்து விட்டிருக்கின்றன. கொடுத்ததையும் மீளப் பெறுகின்ற ஒரு சூழ்ச்சியின் காரணமாக இப்போது அது மிகவும் நலிவடைந்துள்ளது. ஆகவே, 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவேன் என்று சொல்லுவதில்கூட இன்றைக்கு அர்த்தம் இல்லாமல் இருக்கின்றது என்பதைச் சஜித்திடம் தெளிவாக எடுத்துரைத்தோம்.

மாகாண சபை அனுபவங்களையும், மாகாண சபைநிறுவனங்களையும்எடுத்துச் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைமைகளையும் வடக்கு மாகாணஅவைத்தலைவர்சி.வி.கே. சிவஞானம் விவரமாக எடுத்துக் கூறினார்.

இவற்றுக்கெல்லாம்எதிர்க்கட்சித் தலைவர் பதிலளிக்கும்போது தன்னுடைய நோக்கு அதாவது முதலில் கிராமம் கட்டியெழுப்பபட வேண்டும் என்றும், அதன் பிறகு நகரம், பிரதேசசெயலகம், மாவட்டம், மாகாணம் கட்டியெழுப்பபட்டு அதற்குப் பிறகுதான் நாடு கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதே என்று தன்னுடைய கோட்பாட்டைப் பற்றி சொன்னார்.

அடிமட்டத்திலே இருக்கின்ற நிறுவனங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும் என்பது தன்னுடைய கோட்பாடு என்றும் அவர் கூறினார்.

இதில் விசேடமாக நிதிப் பகிர்வு என்ற விடயத்தையும் அவர் சொன்னார். அதாவது அதிகாரப் பகிர்வைக் கொடுத்துவிட்டு நிதிப் பகிர்வைச் செய்யாவிட்டால் அந்த அதிகாரப் பகிர்விலே எந்தவித பிரயோசனமும் இருக்காது என்றும், ஆகவே அது சம்பந்தமாக தாங்கள் விசேட கவனம் எடுப்பதாகவும் சொன்னார்.

நாட்டில் வாழுகின்ற மக்கள் மத்தியிலே அதாவது வெவ்வேறு இனங்கள் மத்தியிலே இருக்கின்ற பரஸ்பர நம்பிக்கையீனத்தை நாங்கள் சிறிது சிறிதாக இல்லாதொழிக்க வேண்டும், சேர்ந்து செயற்பட வேண்டும் என்கின்ற கருததையும் அவர் வலியுறுத்தினார்.

அவர்சொல்லுகின்றகருத்துக்கள் நல்லவை. அவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், எங்களது தமிழ் மக்களின் அடையாளங்கள் பேணப்பட வேண்டும். தமிழ் மக்களது தாயகத்திலே வடக்கு - கிழக்கு இணைந்ததான ஓர் அலகிலே முழு அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும்என்பதே எங்கள் மக்களுடைய எதிர்பார்ப்பு எனக் கூறியிருந்தோம்.

அவர் சொல்லுகின்ற மற்ற விடயங்கள் எல்லாம் நல்லவை. வரவேற்கத்தக்கவை. ஆனால், சில வேளைகளில்எங்களுடையமக்கள் தூர நோக்கோடு எதிர்பார்க்கின்ற அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசாமல், அதைக் குறித்து வாக்குறுதிகளைக் கொடுக்காமல்வேறுவிடயங்களைச் சொல்லுவது அதிகாரப் பகிர்வைப் பற்றி சொல்லுவதிலேயிருந்து தப்பியோடுகின்ற விடயமாக எங்களுடையமக்கள்கருதுவார்கள் என்பதை அவருக்குத் தெளிவாக நாங்கள் சொல்லியிருக்கின்றோம்.

ஆகையினாலே மற்ற எல்லா நல்ல விடயங்களையும் பற்றிச் சொல்லுகின்றபோது அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அவருடைய நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக எங்களுடைய மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் விபரமாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கின்றோம்.

இதற்கு அவர் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் அவை அனைத்தும் வரும் என்றும், இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டு முன்கூட்டியேதேர்தல்அறிக்கையில் வரும்என்றும்சொல்லியிருக்கின்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் தன்னுடைய தேர்தல் அறிக்கையில்சொன்னவிடயங்களை வைத்துத்தான் அவருக்கு நாங்கள் ஆதரவளிக்கும் தீர்மானங்களை எடுத்திருந்தோம். அதனை அவருக்கு இப்போது மீளவும் ஞாபகமூட்டினோம். அப்படிநாங்கள ஒரு தீர்மானத்தை அன்று எடுத்த பின்னர் தான் எமது மக்கள் சஜித் பிரேமதாஸவுக்குப் பெரிவாரியாக வாக்களித்திருந்தார்கள்.

ஆகையினால் அவர் கொடுக்கின்றவாக்குறுதிளங்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் சொல்ல வேண்டும். அதை வைத்துத்தான் நாங்கள் எங்கள் தீர்மானங்களை எடுப்போம் என்பதை அவரிடம் திடமாகச் சொல்லி அனுப்பிருக்கின்றோம்.

நாளை (இன்று) ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எங்களை வந்து சந்திக்க இருக்கின்றார். அந்தச்சந்திப்புத்தான் முததலில் ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பாகும். சஜித்துடனான சந்திப்பு அதற்குப் பிறகு ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பாகும். ஆனால், இது முதல் நடக்கின்றது. அது பிறகு நடக்கவுள்ளது - என்றார்.

இதன்போது, 'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஆதரவு வழங்குமாறு வெளிப்படையாகச் சஜித் பிரேமதாஸ உங்களிடம் கோரிக்கை விடுத்தாரா?' - என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு ''எங்கள் ஆதரவுவேண்டும் என்று அவர் நேரடியாகக் கேட்கவில்லை. ஆனால், அவர் வந்து எங்களைச் சந்தித்ததும், எம்முடன் நடத்திய பேச்சுகளும்அப்படியானதாகத்தான் இருந்தது" - என்றார் சுமந்திரன்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளை ஆராய்வதற்காக விரைவில் இலங்கைக்கு வருகை தர இருக்கிறார் என்றும் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

அண்டைநாடுகளுக்குமுதலிடம் கொடுக்கும் இந்தியாவின் கொள்கை குறித்தும் இந்த சந்திப்பில் கருத்துப் பரிமாறப்பட்டன.

திருகோணமலையை மையமாக கொண்டு இந்திய அரசால் ஆரம்பிக்கப்பட இருக்கும் கைத்தொழில்வலயம்தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது. பல இந்திய முதலீட்டாளர்கள் அங்கு தமது முதலீட்டுகளை மேற்கொள்ளவுள்ளனர்எனவும்இந்த தொழில் வலயத்தில் இந்தியாவைத் தவிர ஏனைய நாடுகளின் முதலீட்டாளர்களையும்இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, புதிய பொருளாதார மாற்றச்சட்டத்தின்மூலம்விவசாயம், சுகாதார கல்வி மற்றும் பொருளாதார முகாமைத்துவம்ஆகியதுறைகளின் அதிகாரங்கள்மாகாணசபைகளுக்கு வழங்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்தோடு உண்மை மற்றும் நல்லிணக்கச் சட்ட மூலம் எதிர்வரும் ஜூலை மாதத்திற்குள் நாடாளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கையில் செயற்படுத்தப் பட்டுள்ளவிவசாயநவீனமயமாக்கல் வேலைத்திட்டம்தொடர்பிலும்இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் இரு நாட்டு மீனவர்களுக்கு இடையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில்விரைவானதீர்மானத்தை எட்டுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

தோட்ட லயன் அறைகள், தோட்ட கிராமங்களாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் எனவும், அது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டதன் பின்னர் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தலைமீட்டின் மூலம் அந்தந்த கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடியும்எனவும்ரணில்விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலங்களில் இலங்கைக்குவருமாறுசெய்யுமாறு இந்தியப் பிரதமருக்கு அழைப்பு விடுத்தது தொடர்பாகவும் ஜனாதிபதி இங்கு நினைவு கூர்ந்தார். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுகா செனவிரத்ன, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா மற்றும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மொட்டு கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும்நவம்பர்மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் அலுவலகத்தை ஆரம்பித்துள்ளோம். எதிர்வரும் நாட்களில் சகல தேர்தல் தொகுதிகளிலும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளோம்.

நல்லாட்சிக் காலத்தில் முறையற்ற வகையில் பிற்போட்ட மாகாண சபைத் தேர்தல் பற்றி தற்போது எவரும் பேசுவது கிடையாது. மாகாண சபைத் தேர்தலைநடத்தினால்படுதோல்வி அடைவதை முன்கூட்டியதாக அறிந்தே நல்லாட்சி ஆளும் தரப்பு தேர்தல் முறைமை திருத்தம் ஊடாக தேர்தலை பிற்போட்டது.

ஜனாதிபதிவேட்பாளர்தொடர்பில் இறுதி தீர்மானத்தை எடுத்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்சநாட்டுமக்களுக்கு வெகுவிரைவில் அத்தீர்மானத்தை அறிவிப்பார். எமது தீர்மானத்தை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாகவே தெரிவு செய்தோம். இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்குவதாகவும் அல்லது அவரை வேட்பாளராக களமிறக்குவதாகவும் நாங்கள் எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை.

பொது ஜன பெரமுன தலைமையிலான ஆளும் தரப்பு மீண்டும் தோற்றம் பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். ஆகவே கட்சியை முன்னிலைப்படுத்திய வகையில் அரசியல் தீர்மானங்களை எடுப்போம் என்றார்.

## முன்பள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அகுனகொலபேலஸ்ஸ பிரதேசத்திலமுன்பள்ளி ஆசிரியர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் அமைச்சர்கலந்துரையாடியபோதே அவர்; இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவித்த அமைச்சர், முன்பள்ளி ஆசிரியர்களின் 2500 ரூபா கொடுப்பனவை 5000 ரூபாவாக அதிகரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரைவிடுத்துள்ளார்என்றும் தெரிவித்தார்.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்துகொண்டார்.

நிகழ்வில் சஜித் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாது முடக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளின் செயற்பாடுகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. மாகாண சலைகளின் அவைத் தலைவர்கள் தற்போதும் சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

எந்தவொரு பணிகளும் ஆற்றப்படாத நிலையில் மாகாண சபைகள் இருப்பதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை. ஜனாதிபதித் தேர்தலில் வென்றதும் இந்த வருடத்தின் இறுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவுள்ளோம். அதில் எவ்விதமான மாற்றுக் கருத்துக்களும் இடமில்லை.

அதேநேரம் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தினை மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பின்னிற்கப்போவதில்லை என்றார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளை உரிய தரப்பினரின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தினர் தமக்கு ஏற்ற தொழில்களை பெற்றுக்கொடுக்குமாறு கோரி யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். போராட்ட இடத்திற்குவருகைதந்தஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, போராட்டத்தில்ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

அவர்களின் பிரச்சினையை நாடாளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுசெல்ல உள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்துள்ளார். தமது ஆட்சியில் கீழ் பட்டதாரிகளுக்கு அரச வேலை வாய்ப்பு அல்லது தொழில் முயற்சியாண்மையை தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும், விசேட தேவையுடைய பட்டதாரிகளுக்கும் எந்தவித பாரபட்சமும் இன்றி நாட்டுக்கு சேவையாற்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும்அவர்இதன்போது தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir





## மத்தியஸ்த திறன்கள் குறித்த பயிற்சி நெறி

(பாறுக் ஷிஹான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்எருவில் பற்று மத்தியஸ்த சபைகள் குழாத்திற்கு மத்தியஸ்தராக தெரிவு செய்வதற்கான மத்தியஸ்த திறன்கள் மற்றும் உபாய மார்க்கங்கள் சம்பந்தமான 05 நாள் பயிற்சி நெறி களுவாஞ்சிக்குடி சரஸ்வதி பாடசாலை மண்டபத்தில் திங்கட்கிழமைஆரம்பமானது.

குறித்த 05 நாள் பயிற்சி நெறியானது மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் ஆலோசனைக்கமைய உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் பங்குபற்றலுடன் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மாலை 4.30 மணி வரை நடைபெற்றது.

இந்தப் பயிற்சி நெறியில் பிரதான வளவாளர்களாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மத்தியஸ்த பயிற்றுநர் அதிகாரி எம்.ஐ.எம் ஆஸாத் வவுனியா மற்றும் மன்னார் மத்தியஸ்த பயிற்றுநர் அதிகாரி எஸ்.விமலராஜா ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி நெறி தொடர்பில் விளக்கவுரைகளை வழங்கினர்.

இறுதியாக 05 நாட்களும் இப்பயிற்சி நெறியில் பங்கேற்றவர்கள் இறுதி நாளன்று நடைபெறுகின்ற பரீட்சையில் கலந்து கொள்வது கட்டாயமானதாகும் என அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மத்தியஸ்த பயிற்றுநர் அதிகாரி எம்.ஐ.எம் ஆஸாத் குறிப்பிட்டார்.

மேலும் ஏறாவூர் பிரதேச செயலகத்தின் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் அபிவிருத்தி உத்தியோகத்தரும் மட்டக்களப்பு மாவட்ட செயலக மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் பதில் அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.ஏ.எம் அஜ/ன், கல்முனை பிரதேச செயலகத்தின் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் அபிவிருத்தி உத்தியோகத்தரும் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தின் பதில் அபிவிருத்தி உத்தியோகத்தருமான பாறுக் ஷிஹான், கல்முனை வடக்கு பிரதேச செயலக மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் க. அருள் பிரசாந்தன், வெல்லாவெளி பிரதேச செயலக மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி லோஜினி விஜயநாதன் ஆகியோரும் இப்பயிற்சி நெறியில் பங்கேற்று இருந்தனர். (05)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் மஹியங்கனையில் கைதானார்

மஹியங்கனை அல்ஹேனத்தலாவ வனப்பகுதியில் சமீப காலமாக பெரியளவில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டுவந்த இடத்தை சுற்றிவளைத்து, 20 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு, 850, 750 மில்லிலீற்றர் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

சந்தேக நபர் திஸ்ஸபுர - கமகும்புர, மாபகதேவாவ பகுதியை சேர்ந்த 35 வயதுடையவர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஒருவர் ஈடுபடுவதாக மஹியங்கனை பொலிஸ் போதை தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமையவே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான நபரை திங்கட்கிழமை மஹியங்கனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை நல்லிணக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளர்களாக சர்வமத தலைவர்கள் நியமனம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவால் சர்வமத தலைவர்களான வன. கலாநிதி சாஸ்த்ரபதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யித் அல்-ஹாபிழ் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, அருட்தந்தை கலாநிதி நிஷான் குரே பாதர் ஆகியோர் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக்கடிதத்தை நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ வழங்கி வைத்தார்.

நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வை வலுப்படுத்தல். சகல இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை நோக்கி அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சர்வ மத நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக இவ்வமைச்சிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள செயற்பணிகளை ஒருங்கிணைத்தல் இப்பதவியின் பிரதான இலக்கு மற்றும் செயற்பணிகளாகும் என்றும் நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.









சர்வமத தலைவர்களான வன. கலாநிதி சாஸ்த்ரபதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யித் அல்-ஹாபிழ் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, அருட்தந்தை கலாநிதி நிஷான் குரே பாதர் ஆகியோர் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் இன ஒற்றுமைக்காக பல்வேறு செயற்பாடுகளை 20 வருடங்களுக்கு மேலாக முன்னெடுத்து வருகின்றவர்கள்.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தங்களுடைய அனுபவரீதியான செயற்பாடுகளை கடந்த காலங்களில் நிஷரூபித்துக் காட்டியவர்கள்.

சர்வ மதக் கூட்டமைப்பின் முக்கியஸ்தவர்களாகவும் சிறந்த இன ஒற்றுமைக்கான முன்மாதிரி மிக்கவர்களாகவும் இந்த சர்வமதத் தலைவர்கள் செயற்பட்டு வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியருக்குச் சேவை நயப்பு







(பாறுக் ஷிஹான்)

மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக ஆசிரியராக கடமையற்றி ஓய்வு நிலையயடைந்த எம்.எம்.எம். அப்துல் நசார்சேவை நலன் பாராட்டு விழா கடந்த புதன்கிழமை கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சேர் ராசீக் பரீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.எம். அப்துல் நசார் 1988 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சேவையில் இனைந்ததிலிருந்து சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம், சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைகளில் கடமையாற்றியதுடன் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் ஆங்கில பாட ஆசிரியராக தன்னை இனைத்து கொண்ட எம்.எம்.எம். அப்துல் நசார் ஆசிரியர் சுமார் 28 ஆண்டுகள் இக் கல்லூரிக்கு சேவையாற்றியதுடன் 2024.06.03ஆம் திகதியுடன் இலங்கை ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.எம். அப்துல் நசார் மஹ்மூத் மகளிர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக, கல்லூரியின் முகாமைத்துவ குழு உறுப்பினராக, ஒழுக்காற்று சபை குழு உறுப்பினராக, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினராக, ஆசிரியராக, வகுப்பாசிரியராக, சிறந்த அலுவலக நிர்வாகியாகவும் செயற்பட்டதுடன் முன்னாள் அதிபர் ஏ.எச்.எம். பஷீர் சேர் காலத்தில் ஆரம்பம் செய்யப்பட்ட இரு மொழி பிரிவையும் கல்லூரியின் ஆங்கில பாடத்தை வளர்ச்சியடைய செய்வதில் முக்கிய பாத்திரத்தை வகித்தவர்.

பாடசாலை வளர்ச்சி, ஆங்கில மொழி, ஒழுக்கம், முகாமைத்துவ அபிவிருத்தியில் தன்னை முழுமையாக அறபணித்து பல அதிபர்களுடன் சேவையாற்றிய ஒரு சிறந்த ஆசானை வாழ்த்தி பாராட்டி கௌரவிப்பதில் பாடசாலை சமூகம் பெருமிதம் கொள்கின்றது.

நிகழ்வில் அதிபர், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற அப்துல் நசார் ஆசிரியர் பற்றிய நினைவு பெயர் உரைகள் மற்றும் வரலாற்று நினைவலைகளை சபையினர் மத்தியில் பகிர்ந்து கொண்டனர்.

ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழாவை சங்க செயலாளர் ஆசிரியர் முஸ்தபா ஹக்கீம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர். சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.எம். அப்துல் நசார் மூப்பத்தி ஆறு வருட கால ஆசிரியர் சேவையினை பாராட்டி பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டதுடன் ஆசிரியர் நலன்புரி சார்பான நினைவு பரிசினை அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன. தரம் 06 தொடக்கம் 13 வரையான பகுதித்தலைவர்கள் அதனுடன் தொடர்பான ஆசிரியர்கள் இனைந்து பரிசில்களை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் ஹாஜியாணி எஸ்.எஸ்.எம். மசூது லெவ்வை, உதவி அதிபர் என்.டி. நதீகா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசார ஊழியார்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர் மனைவி, பிள்ளைகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## சாத்தியங்களும் பாதகங்களும்

தமிழர்களுக்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழீழம் கேட்பேன் என்று தமிழ்நாட்டின் ஆன்மீகத் தலைவர்களில் ஒருவரான மதுரை ஆதினம் தெரிவித்திருக்கிறார்.

நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெற்றது. இதன் மூலம் தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் இந்தியப் பிரதமராக மோடி பதவியேற்றுக்கொண்டார். அவரது பதவியேற்பு நிகழ்வில் இலங்கை அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

மோடியின் மூன்றாவது பதவியேற்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவரிடம் தமிழீழம் கேட்பேன் என்கிற சர்ச்சையை கிளப்பி விட்டிருக்கிறார் மதுரை ஆதீனம்.

”இலங்கையில் இலட்சக்கணக்கான மக்களைக் கொன்றுகுவித்தவர்களும் வெற்றிபெற்றுவிட்டார்களே என்ற வருத்தம் எனக்கு இருந்தது. அதன் காரணமாகத்தான் அவர்களுக்கு மத்தியில் ஆட்சி செய்ய முடியவில்லை.

அதேநேரம், இந்தியப் பிரதமர் மோடியிடம் ஒரு முக்கிய கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். ஈழத்தில் இருக்கும் மக்களைப் பாதுகாக்க தமிழீழம் உருவாகவேண்டும். மோடி அதற்கு உதவவேண்டும்.

மோடி பிரதமரானதில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி. சீமானின் வெற்றியால் விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாட்டில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. நான் மோடியிடம் ஈழத் தமிழர்களுக்காகத் தனி நாடு கேட்கவேண்டும் என்று சீமான் என்னிடம் கேட்டிருந்தார். அதைத்தான் நானும் கூறுகின்றேன்” என்று மதுரை ஆதீனம் தெரிவித்திருக்கிறார்.

இறுதிப் பேருக்குப் பின்னர் வழக்கிழந்து போய்விட்ட தமிழீழத் தனிநாட்டை மதுரை ஆதீனம் மீண்டும் சர்ச்சைக்குரிய பேசுபொருளாக்கியிருக்கிறார். அவரது கோரிக்கையை ஏற்று மோடி மட்டுமல்ல எந்தவொரு இந்தியப் பிரதமரும் இலங்கையில் தனிநாட்டை உருவாக்கிக்கொடுக்கும் சூழல் எப்போதும் வரப்போவதில்லை என்பதே இன்றைய யதார்த்தம். நாளை நிலமைகள் மாறும்போது அரசியல் நிலைப்பாடுகள் மாறுபடலாம், ஆனால் இன்றுள்ள நிலையில் இலங்கையில் ஒரு தனிநாடு அமைய இந்தியா ஒருபோதும் உதவாது.

அதற்கு மேலும் போருக்குப் பின்னரான இலங்கையின் அரசியல் சூழலில் ”பிரிக்கப்படாத, பிளவுபடுத்த முடியாத” ஒருநாட்டுக்குள் ஈழத் தமிழர்களுக்கான தீர்வு என்பதுதான் இங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கின்றது. அதிகாரப் பகிர்வு என்பதையும் கூட்டாட்சி (சமஷ்டி) என்பதையும் தனிநாட்டுக்கான வழித்தடம் என்ற சந்தேகத்துடனேயே சிங்களவர்கள் அணுகிவரும் நிலையில், தனிநாட்டைக் கைவிட்டுத்தான் ஒரு உள்ளக கூ–ட்டாட்சியை தமிழர்கள் தமது எதிர்பார்ப்பாக முன்வைத்துவரும் நிலையில், இந்தியாவில் இதுபோன்று தமிழீழம் குறித்து எழக்கூடிய கருத்துக்கள், தீர்வு நோக்கிய பாதையை மிகக் கடினமாக்கிவிடும்.

தமிழீழத்தை இந்திய அரசு பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையிருப்பின் அதற்காக ஈழத் தமிழர்கள் எவ்வளவு துன்பங்களையும் தாங்கலாம், ஆனால், அதற்கு வாய்ப்புக்களே இல்லாத நிலையில் இதுபோன்ற கருத்துக்கள் ஈழத்தில் தமிழர் தம் அரசியலைச் சிக்கலுக்குள்ளாகுவதுடன் தீர்வையும் மேலும் பிரச்சினைக்குள்ளாக்கிவிடும். எனவே தமிழ்நாட்டின் அரசியல் மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் இது விடயத்தில் விழிப்புடன் நடந்துகொள்வதே அவர்கள் ஈழத் தமிழர்களுக்குச் செய்யக்கூடிய பேருதவியாக இருக்கும்.

# அமர்ந்தே இருப்பது ஆபத்து, ஏன்?

**கு.கணேசன்**

கொரோனா பெருந்தொற்று எப்போது பரவத் தொடங்கியதோ, அப்போதிருந்தே நம் அன்றாட வாழ்வியலில் பல மாற்றங்களைக் கண்கூடாகக் காண்கிறோம்.

ஊரடங்கில் வெளியில் செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தபோது, ‘இணையவழி வணிக’த்தில் இறங்கினோம். அதை இப்போதும் கைவிட முடியாமல் கஷ்டப்படுகிறோம். இருந்த இடத்தில் இருந்துகொண்டே கைபேசி பொத்தானைத் தட்டி, வீட்டுக்குத் தேவையான ஊறுகாயிலிருந்து ஸ்மார்ட் போன், டிவி வரை எல்லாவற்றையும் வரவழைத்துவிடுகிறோம். கடைக்கு நடந்து செல்வதைக் குறைத்துக்கொண்டோம். மற்ற வேலைகளுக்கும் தெருவில் இறங்க வேண்டிய தேவை குறைந்துபோனது.

கொரோனா காலத்தில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியாமல், கைகளில் கைபேசியைக் கொடுத்து, ‘இணையவழி கற்றலு’க்குப் பழக்கப்படுத்தினோம். அதை இப்போதும் அவர்கள் உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டார்கள். மாலையில் விளையாடச் செல்லும் வழக்கத்தைக் கைவிட்டார்கள். கைபேசியே கதி என்று வீட்டில் அமர்ந்திருக்கிறார்கள்.

பெரியவர்கள் நாம் பேருந்திலோ, சொந்த வாகனத்திலோ அலுவலகம் செல்ல முடியாமல் ‘வீட்டிலிருந்து வேலை’ செய்ய ஆரம்பித்தோம். அதுதான் வினையாயிற்று. கொரோனா பெருந்தொற்று முடிவுக்கு வந்த பின்னும், பன்னாட்டு நிறுவனங்கள் ‘வீட்டிலிருந்தே வேலை’ கோட்பாட்டை நம் தலையில் கட்டின. கணினியும் கைபேசியும் நம்மை ‘ஆள’ வந்தன. அதனால் அமர்ந்தே செய்யும் வேலைகள் அதிகரித்தன.

வெயிலில் அலைந்து திரிந்து வேலை செய்வதை ஒப்பிடும்போது அமர்ந்தே வேலை செய்வது சுலபமாகத் தோன்றலாம். ஆனால், இந்தப் புதிய போக்கு நம் ஆரோக்கியத்துக்கு எப்படியெல்லாம் குழி பறிக்கிறது என்பதை எத்தனை பேர் புரிந்திருக்கிறோம்?

### முதுகு வலியின் பிறப்பு!

ஒரே இடத்தில் மணிக்கணக்கில் அமர்ந்து கொண்டு வேலை செய்யும்போது கீழ்முதுகில் கயிறு கட்டியதுபோல் அழுத்தம் அதிகரிக்கிறது; தசை இயக்கம் குறைகிறது; தசைநார் இறுகுகிறது. முதுகெலும்புச் சங்கிலியில் உள்ள இடைத் தட்டு (Disc) நசுங்குகிறது. இயல்பாக இருப்பவர்களுக்கே இந்த நிலைமை என்றால், உடற்பருமன் உள்ளவர்களுக்குச் சொல்லவா வேண்டும்? இடைத் தட்டு வீங்கிவிடுகிறது அல்லது விலகிவிடுகிறது. அப்போது கீழ் முதுகுவலி வருகிறது.

நாம் அமர்வதிலும் ஓர் ஆரோக்கிய அம்சம் இருக்க வேண்டும். நிமிர்ந்து அமர்வதுதான் அந்த ஆரோக்கிய அம்சம். அப்படி அமர்பவர்கள் பாதிப்பேர்கூட இல்லை. சிலர் கூன் விழுந்த நிலையில் அமர்வார்கள். இன்னும் சிலர் ஒரு பக்கமாக சாய்ந்தும் முதுகு வளைந்தும் அமர்வார்கள். இன்னும் பலர் அமர்ந்த மாத்திரத்தில் அரை அடி ஆழத்துக்கு அழுந்திக்கொள்ளும் மெத்தைகளில் அமர்வார்கள். இப்படிச் செய்வது அவர்களுக்கு வேண்டுமானால் வசதியாக இருக்கலாம். முதுகெலும்பின் வளைவுக்கு அவை மோசம் செய்யும். அப்போது முதுகு வலி ஆக்ரோஷம் அடையும்.

இப்போதாவது நாம் உஷாராக வேண்டும். இல்லையென்றால், கீழ்முதுகில் கொஞ்சம் கொஞ்சமாக வலி கூடிக்கொண்டே போய் பின்புறத் தொடைக்கோ, காலுக்கோ அது பரவிவிடும். ‘மின்சார ஷாக்’ மாதிரியான அந்த வலியைத் தொடர்ந்து கால் மரத்துப்போகும். படுத்து ஓய்வெடுத்தால் கால் வலி குறையும்; நடக்கும்போது வலி அதிகமாகும்.

நெல்லுக்குப் பாய்ச்சிய தண்ணீர் புல்லுக்கும் போய்ச் சேர்கிறமாதிரி முதுகில் ஏற்பட்ட பிரச்சினை இப்போது கால் நரம்புக்கும் பரவிவிட்டது என்று அர்த்தம். ‘சியாட்டிகா’ (Sciatica) எனப்படும் அந்தக் கால் குடைச்சல் சிலருக்குப் படுக்கையில் முடக்கிப்போடும் அளவுக்குக் கடுமையாகிவிடும் என்றால் அதன் கொடுமையைப் புரிந்துகொள்ளுங்கள்.

### கழுத்து வலி நிச்சயம்

இப்போதெல்லாம் அலுவலகத்தில் மேசைக் கணினியில் வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வந்ததும் மடிக்கணினியில் வேலை செய்வதும் அதிகரித்துவருகிறது. அப்போது பொருத்தமான இருக்கைகள் இல்லாதபோது, பலரும் சோபாவில் அல்லது படுக்கையில் சாய்ந்துகொண்டு, கழுத்தைத் தூக்கிக்கொண்டும், குனிந்துகொண்டும்தான் மடிக்கணினித் திரையைப் பார்க்கிறார்கள். இந்தப் பழக்கம் கழுத்துத் தசைகளை இறுக்கிக் கழுத்துவலிக்கு மாலை சூடுகிறது.

### மாற்றம் காணும் வளர்சிதை மாற்றம்

அடுத்து, வீட்டில் உள்ளவர்கள் அதிக நேரம் அமர்வது தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால்தான். அப்போது சும்மா அமர்வதில்லை. கையில் ஒரு தட்டு நிறைய நொறுவைகளை எடுத்துக்கொள்கிறார்கள். அளவில்லாமல் அதைத் தின்று தீர்க்கிறார்கள். இது நாள்பட நாள்பட உடற்பருமனை போனஸாகக் கொடுத்துவிடுகிறது. அத்தோடு நீண்ட நேரம் அமர்ந்திருக்கும்போது, உடலுக்குள் வளர்சிதை மாற்றப் பணிகளில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றின் விளைவாக, உடலுக்குள் ‘இன்சுலின் எதிர்ப்பு நிலை’ (Insulin Resistance) அதிகரிக்கிறது.

இது இளம் வயதிலேயே நீரிழிவு நோயைத் தானமாகத் தந்துவிடுகிறது; கொஞ்ச நாளில் உயர் ரத்த அழுத்தத்தைத் துணைக்கு அழைக்கிறது.

அமர்ந்தே இருக்கும்போது உணவுக் கலோரிகள் உடலில் சரியாக எரிக்கப்படாமல் போகும். அப்போது கெட்ட கொழுப்புக்குத் திருவிழா கொண்டாட்டம் ஆகிவிடும். பிறகு, இந்த மூன்றும் ஜோடி சேர்ந்து இதய நோய்க்கு ‘முன்பணம்’ கட்டும். இதை உறுதிசெய்யும் விதமாக வந்திருக்கிறது ‘ஹார்வர்டு ஹெல்த் ஸ்டடி’ (Harvard Health Study) எனும் அமெரிக்க ஆய்வு.

ஆம், நீங்கள் ஒரு மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து இருக்கையில் அமர்ந்திருக்கிறீர்கள் என்றால், அது ஒரு சிகரெட் புகைப்பதற்குச் சமம் என்கிறது அந்த ஆய்வு. கூடவே உங்களுக்குப் புகைப்பழக்கமும் இருக்கிறது என்றால், மாரடைப்பு வாய்ப்புக்கான வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகரிக்கிறது என்று கூவுகிறது அதே ஆய்வு.

இவை தவிர, நீண்ட நேரம் அமர்ந்திருக்கும்போது கால்களில் ரத்த ஓட்டம் தேங்கிவிடும். இதனால் ரத்த உறைவு (DVT) ஏற்படும். மாரடைப்பையும் பக்கவாதத்தையும் கொண்டு வந்து சேர்க்கும் ‘கூரியர்’ இது. சிலருக்குச் சுருள் சிரை நோய் (Varicose veins) வரக்கூடும்.

### தப்பிக்க என்ன வழி?

நீங்கள் அமரும் இருக்கை முதலில் சரியாக இருக்க வேண்டும். முதுகையும் கழுத்தின் பாரத்தையும் தாங்கும் வகையில் இருக்கையில் குஷன் இருந்தால் சிறப்பு. நிமிர்ந்து அமர்வதும், கால்களை செங்குத்தாகத் தொங்கப்போட்டு, தரையில் பதித்துக்கொள்வதும் முக்கியம்.

கணினியில் வேலை செய்யும்போது 20 நிமிடங்களுக்கு ஒருமுறை கண் பார்வையைக் கணினியிலிருந்து விலக்கி, 20 அடி தொலைவில் இருக்கும் ஒரு பொருளை 20 நொடிகளுக்குப் பார்க்க வேண்டும். இப்படிச் செய்தால் கழுத்துக்கும் கண்ணுக்கும் நல்லது.

அடுத்து, அமர்ந்த இடத்திலிருந்து மணிக்கொரு முறை எழுந்து 5 நிமிடம் நிற்கலாம்; நடக்கலாம்; கை, கால்களை நீட்டி மடக்கலாம். இந்த இடத்தில் மதுரையில் இருக்கும் என் பேராசிரியர் டாக்டர் சந்திரபோஸ் நினைவுக்கு வருகிறார். அவர் நோயாளிகளைப் பார்க்கும்போது தொடர்ந்து அமர மாட்டார். நோயாளி அமர்ந்த இடத்துக்கு அவரே சென்று நின்றுகொண்டுதான் பரிசோதிப்பார். இது நல்ல உத்தி.

அலுவலகத்தில் முடிந்தவரை மின்தூக்கிகளைப் பயன்படுத்தாமல் படிகளைப் பயன்படுத்தலாம். இடைவேளையில் காபி/தேநீர் போன்றவற்றை உங்கள் மேஜைக்கு வரவழைக்காமல், வெளியில் சென்று அருந்திவிட்டு வரலாம். நீண்ட நேரம் கைபேசியில் பேசும்போது நடந்துகொண்டே பேசலாம்.

இது எதுவும் முடியாது என்றால், காலையில் தினமும் அரை மணி நேரம் நடைப்பயிற்சி செய்யுங்கள் அல்லது சைக்கிள் ஓட்டுங்கள் அல்லது நீச்சல் மேற்கொள்ளுங்கள் அல்லது யோகா செய்யுங்கள். அமர்வதால் வரும் ஆபத்துகள் விலகிவிடும்.

# தொண்டர் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கி வைப்பு



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய தமிழ் கிராமங்களில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் கணினி, கணிதம், அறிவியல் மற்றும் ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் இல்லாத சூழல் நிலவுகின்றது. அந்தவகையில் வெருகல் கோட்டத்தில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக் கல்லூரி, திருவள்ளுவர் வித்தியாலயம் மற்றும் துவாரகா வித்தியாலயம் மூதூர் வலயத்தில் உள்ள கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம், இலிங்கபுரம் தமிழ் வித்தியாலயம் மற்றும் ஆதியம்மன் கேணி தமிழ் வித்தியாலயம் மொறவெள கோட்டத்தில் உள்ள அவ்வை நகர் தமிழ் வித்தியாலயம் குச்சவெளிக் கோட்டத்தில் உள்ள திரியாய்த் தமிழ் மகாவித்தியாலயம் மற்றும் விவேகானந்தா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கணிதம், கணினி மற்றும் அறிவியல் கற்பிக்க ஆசிரியர் இல்லை. தமிழ் மாணவரது கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகக் கல்வித் துறையின் வேண்டுகோளுக்கமைய திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கம் மேற்படி பாடசாலைகளுக்குத் தொண்டர் ஆசிரியர்களை நியமித்து மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கி வருகின்றது.

இரு மாதக் மாதக் கொடுப்பனவுகள் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிர்வேலு சண்முகம் குகதாசன், செயளாலர் கணபதிப்பிள்ளை சிவானந்தன், பொருளாளர் இராசரத்தினம் கேகுலதாசன் ஆகியோர் இக்கொடுப்பனவுகளை வழங்கினர்.

(05)

# சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் மாணவர்களுக்குக் கௌரவிப்பு





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் 2024 மாகாண மட்ட புலமை பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவிகள் அப் பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். ஆரிபினால் பரிசுப்பொருள்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், 150 புள்ளிகளுக்கு மேல், 100 இற்கு மேல் 75 இற்கு மேல் என புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கௌரவமும் மற்றும் வகுப்புகளில் மே மாதத்தில் அதிக வரவுகளைத் தந்த மாணவ, மாணவிகளைக் கௌரவித்து பரிசீல்களும் வழங்கப்பட்டன. (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# உலகப் பெருங்கடல் தினத்தன்று நாடளாவிய ரீதியில் நிகழ்வுகள

உலக பெருங்கடல் தினத்தை முன்னிட்டு மட்டக்குளி காக்கா தீவு கடற்கரையை சுத்தப்படுத்தும் பணி சனிக்கிழமை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

கடலின் மதிப்பு மற்றும் கடலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசி யத்தை உணர்த்தும் வகையில் உலகப் பெருங்கடல் தினம் கொண்டாடப்படுகிறது.

கடலின் மதிப்பு மற்றும் கடலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் உலகப் பெருங்கடல் தினம் கொண்டாடப்படுகிறது.

இவ்வருடம் உலக பெருங்கடல் தினத்தை முன்னிட்டு கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை விசேட கடற்கரையை சுத்தப்படுத்தும் நிகழ்ச்சி மற்றும் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

1982 ஜூன் 8 இல் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திக்கான மாநாட்டில், கனடாவின் பெருங்கடல் நிறுவனம் கடல்களுக்கான சர்வதேச தினத்தை முன்மொழிந்தது.

உலகப் பெருங்கடல் தினம் முதலில் ஜூன் 8, 1991 அன்று ரியோ டி ஜெனிரோவில் உள்ள உலகளாவிய மன்றத்தில் முன்மொழியப்பட்டது. அந்தத் தீர்மானத்திற்குப் பிறகு, 2008 இல், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஜூன் 8 ஐ உலகப் பெருங்கடல் தினமாக அறிவித்தது. 2009 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபை 'எங்கள் கடல்கள் நமது கடமை' என்ற கருப்பொருளின் கீழ் முதன்முறையாக உலகப் பெருங்கடல் தினத்தைக் கொண்டாடியது, இது கடல் மற்றும் கடல் அமைப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி உலக சமூகத்திற்குக் கற்பிக்கும் நோக்கத்துடன் கொண்டாடியது.

இந்த ஆண்டு பெருங்கடல் தினத்தின் தொனிப்பொருள் 'புதிய ஆழத்தை எழுப்பு' என்பதாகும். கடல் சூழலைப் பாதுகாப்பதில் நீங்கள் ஆழ்ந்து சிந்தித்து இணைய வேண்டும் என்பதே இதன் பொருள்.

பெருங்கடல் பூமியின் 70 வீதத்துக்கும் அதிகமான பகுதியைக் கொண்டுள்ளது. ஆனால் அதன் நீரில் மிகச்சிறிய பகுதியே ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மனிதகுலம் முழுவதுமாக அதைச் சார்ந்து இருந்தாலும், அது நமக்கு வழங்கும் அகலம் மற்றும் ஆழத்துடன் ஒப்பிடும்போது, கடல் நமது கவனத்தையும் வளங்களையும் ஒரு பகுதியை மட்டுமே பெறுகிறது.





மீன் மற்றும் பிற கடல் உணவுகளைப் பெறுவதற்கு கடல் மட்டுமே முக்கியம் என்று நினைக்கும் மக்கள் இருந்தாலும், மனித னுக்கும் முழு கிரகத்திற்கும் கட லின் நன்மைகள் கடலைப் போலவே பெரியவை.

பூமியின் காலநிலையை ஒழுங்குபடுத்தும் கடல், 'உலகளாவிய காலநிலை கட்டுப்பாட்டு அமைப்பு' என்றும் அழைக்கப்படுகிறது. கடலின் சூடான கட்ட நீரோட்டங்கள் கடல் பகுதிகள் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன மற்றும் பூமியின் வெப்பநிலையை மிதப்படுத்துகின்றன.

மனிதர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய கடல் அதிக அளவு உணவையும் வழங்குகிறது. உலகளாவிய மொத்த விலங்கு புரத நுகர்வில் 16 வீதம் கடல் உணவை அடிப்படையாகக் கொண்டது. மீன், ஓட்டுமீன்கள், மொல்லஸ்கள் மற்றும் கடற்பாசி உள்ளிட்ட பல்வேறு வகையான கடல் தாவரங்கள் உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பூமியில் வாழும் பெரும்பாலான உயிரினங்கள் கடலில் வாழ்கின்றன மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பெரும் பன்முகத்தன்மை உள்ளது. ஆனால் கடல் நீரில் வாழும் பில்லியன்களில் சுமார் 80 வீதம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

பல உயிருள்ள மற்றும் உயிரற்ற வளங்களை கடலில் இருந்து பெறலாம் மற்றும் உலகப் பொருளாதாரத்தின் பெரும்பகுதிக்கு கடல் பங்களித்துள்ளது. அதாவது, சுற்றுலாத் தொழில், உணவு மற்றும் மருத்துவம், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து ஆகியவை அவற்றில் முதன்மையானவை.

உலக பெருங்கடல் தினத்தை கொண்டாடுவதற்கு பல நோக்கங்களை அடையாளம் காணலாம். கடலில் மனித செயல்களின் தாக்கம், உலகளவில் கடலுக்கான குடிமக்களின் இயக்கங்களை உருவாக்குதல் மற்றும் உலக மக்களை அணிதிரட்டுதல் மற்றும் ஒன்றிணைத்தல் ஆகியவற்றைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பது முக்கியம்.

இந்த ஆண்டு உலகப் பெருங்கடல் தினத்தைக் கொண்டாடும் வகையில், கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை 14 கடலோர மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கடற்கரை மற்றும் கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்ச்சிகள் மற்றும் சதுப்புநில மரம் நடும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது.

இவ்வருடம் உலகப் பெருங்கடல் தினத்தைக் கொண்டாடும் வகையில், கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் வழிகாட்டுதலின் கீழ் அம்பாந்தோட்டை பிரதேசத்தில் சதுப்புநில மரம் நடும் நிகழ்வுகள், திருகோணமலை கரையோரப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட பல இடங்களில் கடற்கரை மற்றும் கடற்பரப்பு சுத்தம் செய்தல் மற்றும் மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கடல்சார் சுற்றாடல் பாதுகாபு அதிகாரசபை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் முப்படையினர், காவல்துறை, அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு இதற்கு பங்களிப்பு செய்தனர்.

இந்நிகழ்வில் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் அசேல பி.ராகவ, கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது முகாமையாளர் ஜகத் குணசேகர, சுத்தமான கடல் படை தலைவர் ஜெரோம் பெர்னாண்டோ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(05)



## விவசாய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியளித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின்பதவிப்பிரமாணவைபவத்திற்காக புதுடெல்லி சென்றுள்ள ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை நேற்றுக் காலை நடைபெற்றது. இதன்போதேபங்களாதேஷ்பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவு முறையின் அடிப்படையில் பங்களாதேஷில் செயற்படுத்தப்படும்விவசாயநவீன மயமாக்கல் வேலைத்திட்டத்தை ஆராய்ந்து இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தைவெற்றியடையச் செய்வதற்காக இலங்கை விவசாயத்துறை நிபுணர்கள் குழுவொன்றைபங்களாதேஷிற்கு அனுப்புவதற்கும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇணக்கம்தெரிவித்தார்.

பங்களாதேஷிற்கும் இலங்கைக்கும்இடையில்சுதந்திரவர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்தும்இருநாட்டுத்தலைவர்களும் கலந்துரையாடியதோடு, இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்ததன் பின்னர் பங்களாதேஓடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப் படுவதற்கானவாய்ப்புகள்உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

பங்களாதேஷின் தனியார் முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடுசெய்வதற்கானவாய்ப்புகளை வழங்குவதாகவும் பங்களாதேஷ் பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்உறுதியளித்தார்.

இலங்கைக்கும்பங்களாதேக்கும் இடையில் பயணிகள் படகு சேவையை மேற்கொள்வது குறித்தும் இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது. இதேவேளை, பங்களாதேஷில் நடைபெறும்பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பங்களாதேஷ் பிரதமர் அழைப்பு விடுத்தார். மாநாடு நடைபெறும் காலப்பகுதி இலங்கையில் தேர்தல் நடைபெற இருப்பதால், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் மாநாட்டில் பங்குபற்றுவார்கள் என ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தலின் பின்னர் பங்களாதே ஒக்கு விஜயம் செய்வதாகவும் பங்களாதேஷ்பிரதமரிடம்ஜனாதிபதி உறுதியளித்தார்.

இந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இலங்கையின் பொருளாதாரத்தை மீளமைக்க முடிந்ததையிட்டு பெரு மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தார்.

பொருளாதார மீட்சிக்கு பங்களா தேஷ் மற்றும் இந்தியாவிலிருந்து கிடைத்த ஆதரவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி ணில் விக்ரமசிங்க, அதற்காக தனது நன்றியைத் தெரிவித்தார்

## போராட்டத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.




# நாளை நடைபெறவுள்ள மாபெரும் போராட்டத்துக்கு ஆதரவு நல்குக

## ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

சுபோதினி என்ற அறிக்கை ஊடாக வழங்கப்பட்ட வாக்குறுதியை உடனடியாக அமுல்படுத்தி சம்பள முரண்பாட்டை தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்வரும் ஜ/ன் மாதம் 12 ஆந் திகதி (நாளை) சகல ஆசிரியர்கள் அதிபர்களும் போராட தயாராக வேண்டும் என ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை விசேட செய்தியார் சந்திப்பு ஒன்று அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது அல் -கமஷரூன் வித்தியாலயத்தில் நடைபெற்ற வேளை மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அங்கு தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

சகல கல்வி வலயங்களுக்கு முன்பாக மேற்கொள்ளப்படவுள்ள அதிபர் ஆசிரியர்களின் ஒன்று கூடிய போராட்டமானது ஏன் நடாத்தப்படுகின்றது என்பது தொடர்பில் அனைவரும் தெளிவாக இருக்க வேண்டும்.ஏனெனில் நாங்கள் கேட்பது சம்பள அதிகரிப்பு அல்ல.சம்பள முரண்பாடு. சுமார் 27 வருடங்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தான் எமது ஆசிரி யர்கள், அதிபர்களை இவ்விடயத்தில் ஏமாற்றி வந்துள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டிருந்தோம். அதிகார வர்க்கங்களால் அவ்வப்போது நசுக்கப்பட்டு வந்திருக்கின்றோம். இதன் ஊடாக 2021 ஆண்டு எமது போராட்டத்தின் விளைவாக சுபோதினி என்ற அறிக்கை உருவாக்கப்பட்டு அதன் ஊடாக எமக்கு உரிய சம்பள உயர்வைத் தருவதற்கு வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது. இதனை யாவரும் அறிந்த உண்மையாகும்.அந்த வேளையிலும் சுபோதினி அறிக்கையை நாம் ஏற்றுக்கொள்ள வில்லை.

எனினும் மாணவர்களின் கல்வியின் நலனில் அக்கறை கொண்டு இந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டோம்.எனினும் இவ்வறிக்கையின் ஊடாக வழங்கப்பட்ட வாக்குறுதி தவிர்க்கப்பட்டு இன்று வரை நாங்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றோம்.குறிப்பாகக் கூறப்போனால் மத்திய வங்கியில் கடமையாற்றும் ஓர் இலிகிதரின் சம்பளத்தை கூட 35 வருடங்கள் கடமையாற்று கின்ற அதிபர் மற்றும் ஆசிரியரால் இன்று வரை பெற முடியவில்லை.இந்த நிலை இலங்கையில் தொடர்கதையாகவே உள்ளது.

எனவே, சுபோதினி அறிக்கை ஊடாக எழுத்து மூலமாக எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியைத் தாருங்கள் என வலியுறுத்தி எதிர்வரும் ஜ/ன் மாதம் 12 ஆந் திகதி சகல ஆசிரியர்கள் அதிபர்களும் கல்வி வலயங்களுக்கு முன்பாக இடம்பெறவுள்ள போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள்.

இந்த அரசாங்கத்திற்கு எமது பலத்தைக் காட்டுவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.இனியும் நாங்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லை என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக் கூற வேண்டும்.அவ்வாறு இல்லாவிடின் அடுத்து வரும் ஜ/ன் மாதம் 26 ஆந் திகதி நாடு பூராகவும் குறித்த போராட்டத்தை முன்னெடுத்து அரசாங்கத்திற்கு பாடம் புகட்டப்படும் என்பதை தெளிவு படுத்த விரும்புகின்றோம். அத்துடன் அகில இலங்கை ரீதியாக 3ஃ2 சம்பள போராட்டத்தை முன்னெடுப்பதற்கு 101 வலயக்கல்வி அலுவலகங்களுக்கு முன்பாக போராட்டம் இடம்பெறும் எனக் குறிப்பிட்டனர்.

இந்த விசேட செய்தியாளர் சந்திப்பில், ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்க உப செயலாளர் ஏ.ஆதம்பாவா, இலங்கை ஆசிரியர் சேவை சங்க அம்பாறை மாவட்ட செயலாளர் எம்.எஸ்.சத்தார், இலங்கை ஆசிரியர் சேவை சங்க கல்முனை கல்வி வலய இணைப்பாளர் எஸ்.எம் ஆரிப், இலங்கை ஆசிரியர் சேவை சங்க கல்முனை கல்வி வலய செயலாளர் எம்.எஸ்.எம் சியாத் ,இலங்கை ஆசிரியர் சங்க கல்முனை கல்வி வலய இணைப்பாளர் ஏ.எம்.எம்.சாஹிர், உள்ளிட்டோர் கலந்து கொண்டு தத்தமது கருத்துக்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## புதுக்காடு ஓட்டோ சாரதிகளின் முன்மாதிரியான செயல்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட புதுக்காடு சந்தியில் உள்ள ஓட்டோக்களின் உரிமையாளர்கள் நிழல்தரும் மரங்களை நாட்டி வைத்து அதற்கான பாதுகாப்பு வேலியையும் அமைத்துள்ளனர்.

புதுக்காட்டுச் சந்தியில் இருந்து மருதங்கேணி செல்லும் வீதியின் அருகில் இருந்த பாரிய மரங்களை நீர்ப்பாசன திணைக்களம் கடந்த வருடம் கிளிநொச்சி இரணைமடு குளத்தில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் திட்டத்தினூடாக பாரிய பழைமை வாய்ந்த மரங்களை வெட்டியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குறித்த விடயம் தொடர்பில் கிராம மக்களால் கடும் எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் வெட்டப்பட்ட அனைத்து மரங்களுக்கும் பதில் மரங்கள் மீண்டும் தாம் வைக்கவுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்திருந்தது. இதன் அடிப்படையில் இன்று அதே கிராமங்களை சேர்ந்த புதுக்காடு ஓட்டோ உரிமையாளர்கள் இணைந்து எதிர்கால சந்ததிகளுக்கு பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தில் பாரிய நிழல் தரும் மரக்கன்றுகளை நாட்டி அதற்கான பாதுகாப்பு வேலிகளையும் அமைத்திருந்தனர். இச் செயல் மற்றவர்களுக்கு ஓர் எடுத்து காட்டாக அமையும் எனவும் அனைவரும் மர நடுகைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர். (05 - 113)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பூட்டான் பிரதமர் உட்பட பிராந்திய அரச தலைவர்கள் பலர் இந்த பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டதுடன் பிராந்திய அரச தலைவர்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு உயர் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர், பிராந்திய தலைவர்களுடன்பிரதமர்நரேந்திர மோடி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்குபிரதமர்நரேந்திர மோடிக்கு அடுத்த இருக்கை வழங்கப்பட்டது.

இதேவேளை,பிரதமர்நரேந்திர மோடி ஏற்பாடு செய்திருந்த இராப்போசனவிருந்தில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஏனைய அரச தலைவர்கள் கலந்துகொண்டனர்.

பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பிரசன்னம் குறித்து இந்திய ஊடகங்கள் முக்கிய இடத்தை வழங்கியிருந்ததோடு , புதுடெல்லியின் பிரதான சுற்றுவட்டங்களைச் சுற்றி இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் மோடியின் உருவம் பொறிக்கப்பட்ட பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுகா சேனவிரத்ன, அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன மற்றும் ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரும் இந்த பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டனர்.

## வெற்றிபெற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் அநுரகுமாரதிஸாநாயக்க தெரி வித்தார்.

தங்கலையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. ஆட்சிகள் மாறுகின்றன. ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் மாறவில்லை. திருட்டுக் கும்பல் மட்டும் தான் மாறுகின்றது. மஹிந்த ஆளும் தரப்பாக இருந்தால் பஸில் பிரதான நபராக இருந்து அனைத்தையும் 'டீல்' செய்வாஜு. ரணில் ஆளும் தரப்புக்கு வந்தால் ரவிகருணாநாயக்க பிரதான நபராக இருந்து அனைத்து 'டீல்'களையும் செய்வார். இதைத்தான் ஆட்சி மாற்றம் என்கிறார்கள்.

உங்களுக்கு இன்னுமொரு உதாரணத்தினைக் கூறுகின்றேன். இந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் மஹிந்த அமரவீர ஒரு மக்கள் சந்திப்பையும், பேரணியையும் நடத்தினார். அவர் சந்திரிகா காலத்தில் அமைச்சராக தெரிவானார். பின்னர் மஹிந்த காலத்திலும் அமைச்சராக இருந்தார். மைத்திரியின் காலத்திலும் அமைச்சராக இருந்தார். கோட்டாபயவின் காலத்திலும் அமைச்சராக இருந்தார். தற்போது ரணில் தலைமையிலான ஆட்சியிலும் அமைச்சராக உள்ளார். அவர் செல்கின்ற இடமெல்லாம் வெற்றி பெறுவதாக பெருமை கூறுகின்றார். உண்மையில் அவர் வெற்றிபெறும் பக்கம் தாவிக்கொள்கின்றார். இதுதான் இலங்கையின் இதுகால வரையிலான அரசியல்.

தற்போது, அரசியல் மாற்றத்துக்கான தருணம் ஏற்பட்டுள்ளது. இதுவொரு நல்ல தருணம். உண்மையான மாற்றத்துக்காக மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். முக்கியமான அரசியல் மாற்றம் திடீரென்று ஏற்படுவதில்லை. அது தீர்க்கமான காலமொன்றில்தான் ஏற்படுகின்றது. நாங்கள் 1994ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டபோது அம்பாந்தோட்டையில் கலப்பதி சகோதரர் மட்டுமே வெற்றி பெற்றார். அதற்காக நாங்கள் அரசியல் செய்வதை நிறுத்தவில்லை. தொடர்ச்சியாக அரசியல் செயற்பாடகளில் ஈடுபட்டோம். அதற்கு காரணம் உள்ளது.

அரசியலில் பொருத்தமான தருணம் ஏற்படும். அப்போதுதான் அதிகார மாற்றம் இடம்பெறும். அதனைப்பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். தற்போது அந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அதனை நாம் கைவிடப்போவதில்லை. அதேநேரம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று அதில் அதிகாரங்கள் எமது கைகளுக்கு கிடைத்தவுடன் அன்றைய தினம் இரவே நாடாளுமன்றத்தினைக் கலைப்போம். அதனைத் தொடர்ந்து நீடித்து வைத்திருக்கப்போவதில்லை. மக்கள் ஆணையிழந்த நாடாளுமன்றத்தினை கலைத்து மக்கள் ஆணையுடனான நாடாளுமன்றத்தினை ஏற்படுத்துவோம் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# கிளி. பாரதிபுர மகாவித்தியாலயத்தில் 'ஸ்மார்ட்' வகுப்பறை திறந்து வைப்பு







கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்குப்பட்ட பாரதிபுரம் மகாவித்தியாலயத்தில் பிரபஞ்சம் நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாச்சந்திர பிரகாஷ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் ரஞ்சன், ஐக்கிய பெண்கள் சக்தி மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வு மங்கள வாத்தியத்துடன் ஆரம்பமாகி அழைத்துவரப்பட்டு பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள சரஸ்வதி அன்னையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வழிபட்டிருந்தார் அதன் பின்னர் மாணவச்செல்வங்களால் மலர்தூவி விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். பின் ஸ்மமார்ட் வகுப்பறை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பாரதிபுர கிராம்மானது பின் தங்கிய கிராம்மாக இருந்து வருகின்ற நிலையில் இப்பாடசாலையில் சுமார் 646 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். இந்த ஸ்மார்ட் வகுப்பறை மாணவர்களின் கல்வி நிலையைத் தொடர பெரும் பங்களிப்பாக இருக்கும் எனவும் -

நவீன உலகில் வளமான டிஜிற்றல் எதிர்காலத்திற்காக இந் நாட்டின் இளைய தலைமுறையை,தொழில் நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற, ஸ்மார்ட் கணனி பயன்பாட்டில் தேர்ச்சி பெற்ற சமூகமாக கட்டியெழுப்ப வேண்டும் என்பதே சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவாகும்.

மேலும் கருத்து தெரிவிக்கையில் குறித்த பாடசாலைக்கு 11 லட்சம் ஷரூபா பெறுமதியான உபகரணங்களுடன் ஸ்மார்ட் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் இலங்கையில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் நவீன முறையிலான வகுப்பறைகளை ஆரம்பித்து வைப்பேன் எனவும் இதற்கான செலவு அரசாங்கத்திடம் இருந்து பெறவில்லை இது எனது சொந்த பணம் எனவும் தெரிவித்திருந்தார். சர்வதேச தரத்தில் மாணவர்களுக்கு ஆங்கில அறிவை பெற்றுக்கொடுக்குமாறும் குறிப்பிட்டிருந்தார்.

(05 - 113)

## கந்தப்பளையில் பஸ் கோரவிபத்து ஒருவர் படுகாயம்

நுவரெலியா கந்தப்பளை நகரில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் சிக்கிய நபரொருவர் படுகாயங்களுக்குள்ளாகி கவலைக்கிடமான நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் தீவிர சிகிச்சை பெற்றுவருவதாக கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பஸ் விபத்தில் கந்தப்பளை கொங்கோடியா தோட்ட கீழ் பிரிவைச் சேர்ந்த 42 வயதான நபரே படுகாயமடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு பஸ்ஸின் சாரதியை கைதுசெய்த கந்தப்பளை பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

(05)

போதைப்பொருள் விழிப்புணர்வுக்காக

# 107 அவசர இலக்கம் ஓட்டோக்களில் பதிப்பு

## கிளிநொச்சியில் நடந்தது





போதையற்ற இலங்கையை கட்டி எழுப்புவோம் எனும் தொனிப் பொருளில் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வரும் போதைப் பொருளுக்கு எதிர்ப்பு விழிப்புணர்வுக்காக ஓட்டோக்களுக்கு 107 அவசர தொலைபேசி இலக்கம் அச்சிடும் நிகழ்வு கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரையில் அதிகமாக மக்கள் பாவனை உள்ள இடங்களில் ஓட்டோக்கள் சென்று வருகின்றமையால் அதிகமான மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த முடியும்.

உங்கள் அருகில் போதைப்பொருள் விற்பனை செய்யும் நபர்களை இனம் கண்டால் உடனடியாக 107 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு பொலிஸ் தகவலைப் பரிமாறும் போது விற்பனை செய்யும் முகவர்களை தடுத்து போதையற்ற பிரதேசமாக, மாவட்டமாக, நாடாக மாற்றலாம் என விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான வேலை திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

(05 - 113)

## மு.கா. கிளை புத்தளத்தில் புனரமைப்பு

(கே எ ஹமீட்)

புத்தளம் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள் புனரமைப்பு சம்பந்தமாக கலந்துரையாடல் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் பங்குபற்றுதலுடன் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மத்திய குழு, கிளைகள் புனரமைப்பு, கட்சிப் பணிகள் மற்றும் எதிர்காலசெயற்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் சில தீர்மானங்களும் எடுக கப்பட்டன.

இந்தச் சந்திப் பின்போது முன்னாள் மாகாண சபை உறுப பினர் நியாஸ், உட்பட உயர்பீட உறுப்பினர்கள், நகர மற்றும் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (05)

## பொத்துவிலில் அத்தின்மார்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு




(எம்.எப்.றிபாஸ்)

பொத்துவில் மறுபவடிவம் அறக்கட்டளை அமைப்பு மற்றும் அறிவொளி இலவசகல்விநிலையமும் இணைந்து முஅத்தின்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பொத்துவில் களப்புக்கட்டு சிறுவர் பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

ஆர்.எச்.எப்.அமைப்பின் தலைவர் எம். ரீ. முபாரக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்வி ராஜாங்க அமைச்சர் அரவிந்திரகுமாரின் கல்வி, ஊடக இணைப்புச் செயலாளர் எம்.ஆர். ஹஸிம்டீன் பிரதம அதிதியாகவும், சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாறுக் கௌரவ அதிதியாகவும், அமைப்பின் பிரதம ஆலோசகரும், பொத்துவில் முன்பள்ளி அபிவிருத்தி ஒன்றியத்தின் தவிசாளரும், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகருமான எம். எஸ். எம். அப்துல் மலீக் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர். சுமார் 49 அத்தின்மார்கள் இவ்வைபவத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

(05)

## நம்பிக்கையும், விடாமுயற்சியும் வெற்றியத்தரும்

### என்கிறார் எஸ்.எம்.சபீஸ்

*சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்திலிருந்து கிழக்கின் கேடயம் அமைப்பாளர்களால் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களை சந்திக்கும் நிகழ்வு கிழக்கின் கேடயம் பொது செயலாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான யூ.எல். நூருல் ஹூதா உமரின் தலைமையில் சாய்ந்தமருதில் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*இந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவருமான எஸ் எம் சபீஸ் அவர்கள் உறுதியான நம்பிக்கையும் விடாமுயற்சியும் எமது சமூகத்தின் முன்னேற்றமான மாற்றத்திற்கு வித்திடும் எனத் தெரிவித்தார்.*

*இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், குறைந்த வயதில் அனைவரும் பட்டப்படிப்பைப் பெற வேண்டும் எனும் நமது வேட்கை மிக விரைவில் நிறைவேறும் என்று நம்புவோம். இங்கு வந்துள்ள அனைவரும் என்ன கஸ்டப்பட்டேனும் பட்டப்படிப் பொன்றை நிறைவு செய்ய வேண்டும்.*

*சுயதொழில்களை உருவாக்கி பல பேருக்கு தொழில் வழங்க முடியும் என்ற நம்பிக்கையும், விடாமுயற்சியும் இளைஞர்களிடம் இருந்தால் சமுதாய மாற்றம் தானாக நம் கதவுகளைத் தட்டும்.*

*இவைகளை செய்து முடிக்க இளைஞர்கள் முறையாக வழிப்படுத்தப்படல் வேண்டும் அதற்கு ஒவ்வொரு கிழக்கின் கேடயத்தின் இளைஞர்களும் அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.*

*(05)*

# 'வாழ்வியல் பயணம்' எனனும் நூல் தமிழ் சங்க ஏற்பாட்டில் வெளியீடு

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர் செ.பேரின்பராசாவால் தொகுக்கப்பட்ட பாவாணர் அக்கரைப்பாக்கியனின் வாழ்வியல் பயணம் எனும் நூல் வெளியீட்டு விழா கோளாவில் பெருநாவலர் வித்தியாலய மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

அக்கரைப்பற்று தமிழ்சங்கத்தின் தலைவரும் ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளருமான வா.குணாளன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கலந்து கொண்டார்.

விசேட அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா வைத்தியர் சித்திரா தேவராஜன் ஓய்வு நிலை அதிபர் க.கோபாலபிள்ளை தமிழ்சங்கத்தின் முன்னாள் தலைவர் க.இரத்தினவேல் உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர்.

நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தை ஆசிரியை சாமந்தி டினேஸ் வழங்க வரவேற்புரையை தமிழ்ச்சங்க செயலாளர் வி.சிவன்செயலும் தலைமையுரையை தலைவர் வா.குணாளனும் வழங்கினர்.

நூல் அறிமுகத்தை பிரதேச செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இணைந்து செய்து வைத்ததுடன் நூலாளர் பாவாணர் அக்கரைப்பாக்கியனிடம் இருந்து நூலின் பிரதிகளை பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து அதிதிகளின் கரங்களால் முதல் நூலினை விரிவுரையாளர் கலாநிதி ச.புவனேந்திரன் சார்பாக அவரது சகோதரர் ஆசிரியர் பிரதீபன் பெற்றுக்கொண்டார்.

நூல் அறிமுக உரையை திருக்கோவில் ஆசிரியர் வளநிலைய முகாமையாளரும் தமிழ்ச்சங்கத்தின் உபதலைவருமான ந.சுதாகரன் வழங்க நூல் நயவுரையை ஓய்வுநிலை அதிபர் க.தவராசாவும் வழங்கினர்.

நிகழ்வில் ஆசிரியை ஜெகதாரணியால் நெறியாள்கை செய்யப்பட்ட நடனம் இடம்பெற்றதுடன் நூலாளர் அக்கரைப்பாக்கியன் மற்றும் பிரதேச செயலாளர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு நூலாளர் அக்கரைப்பாக்கியன் அவர்களிடம் கல்விகற்ற பழைய மாணவர்களும் நூலாளரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். (05)

# நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது எனகிறார் ரிசாத்



(ஹஸ்பர் ஏ.எச்)

அரசியல் ஆட்சி அமைப்பின் படி சட்டப்படி 112 நாள்களில் புதிய ஜனாதிபதி கதிரையில் அமர வேண்டும் எனவும் ஜனாதிபதிக்கே நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்த அதிகாரமிருக்கிறது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

திருகோணமலை சாஹிராக் கல்லூரிக்கு ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்து அப்பாடசாலையில் உயர்தரம் எழுதிய 70 மாணவிகளின் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகவில்லை இது தொடர்பில் அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் ,மற்றும் பெற்றார்கள் மாணவர்களுடனான கலந்துரையாடலின் பின்பே ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இதன் போது மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னால் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ஷரூப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் தெரிவிக்கையில் -

சாஹிராக் கல்லூரி மாணவர்கள் எழுதிய அதே மண்டபத்தில் அதே உடை அணிந்து வேறு பாடசாலையின் முஸ்லிம் மாணவிகள் பத்து பேர் எழுதியிருந்தனர் அவர்களுக்கு பெறுபேறுகள் வெளியாகின. ஆனால் சாஹிரா கல்லூரி மாணவிகளில் மாத்திரம் கண்வைத்து இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது அநீதியாகும். கடந்த பத்து வருடங்களாக இந்தக் கல்லூரியில் மருத்துவத் துறை பொறியியல் துறைகளுக்கு அதிகமான மாணவர்கள் தெரிவாகுவது வழக்கம். எனவே பரீட்சை பெறுபேறுகள் வெளியாக வேண்டும் இல்லாது போனால் நாடாளுமன்றிலும் வெளியிலும் நீதிமன்றம் சென்றும் நீதியை இம் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்போம். தேசிய வேட்பாளர் தொடர்பிலும் உயர்பீட முடிவின் பிரகாரம் யாருக்கு ஆதரவு வழங்கலாம் என முடிவுகளை தேர்தலின் போது அவ்வப்போது கட்சி முடிவுகளை வைத்து தீர்மானங்களை எடுப்போம் எந்தத் தேர்தலாயினும் சரி சில மாவட்டங்களில் தனித்தும் சில இடங்களில் இணைந்தும் போட்டியிடுவோம் என மேலும் தெரிவித்தார். (05)

# வேலையற்ற பட்டதாரிகளான எங்களுக்கு அரச நியமனங்களை வழங்கி உதவுங்கள்

## பட்டதாரிகள் சங்கம் உருக்கம்



பட்டதாரிகளுக்கான நியமனங்களை அரச துறையில் வழங்குங்கள் என திருகோணமலை வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்

திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியத்தின் ஊடக சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

எங்களது வேலையில்லா பிரச்சினையை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் செவிமடுக்க வேண்டும். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசுவதற்காக ஊர் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் நாடி உள்ளோம்.

இந்த அரசாங்கம் மிக விரைவில் எங்களது வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையை சரியான முறையில் தீர்க்கா விடின் வீதிக்கு இறங்கிப் போராடுவோம்.

900 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எந்தவிதமான வேலையும் இல்லாமல் வீதிகளிலும் ஏனைய இடங்களிலும் இருக்கின்றார்கள்

வயது 35 கழிந்து விட்டது. எங்களுக்கு சரியான வேலையை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

35 வயதுக்கு பிறகு நிறுவனங்களிலும் உள்ளீர்ப்பு செய்வதற்கு மிகவும் கடினமாகும் .

உள்வாரி வெளிவாரி வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் என எவ்வித பாகுபாடும் இன்றி எங்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்று தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம் பெண்ணுரிமை பெண் சமூகம் பெண்களுக்கான பாதுகாப்பு சகலதையும் வழங்கக்கூடிய ஒரு நாடு அப்படியாக இருந்தும் எங்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற கால அவகாசம் மிகவும் அதிகமாக இருக்கின்றது.

உரிய வயதில் உரிய வேலை வாய்ப்புகளை தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனவும் அரசாங்கத்திடம் மேலும் கோரிக்கைகளை முன்வைத்ததுடன் இதில் பெரும்பாலான வேலையில்லா பட்டதாரிகளும் கலந்து கொண்டனர். (05)

# மகிழூர் மாணவர்களுக்கு பெரண்டினாவின் கற்றல் விளையாட்டு உபகரணம் வழங்கல்





(வி.ரி. சகாதேவராஜா)

உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு பெரண்டினா நிறுவனத்தின் களுவாஞ்சிக்குடி கிளையின் ஏற்பாட்டில் மகிளுர் கிழக்கு நாகதேவி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்வுக்கு பெரண்டினா நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய முகாமையாளர் எஸ் .பிரதிலிபன் மற்றும் கிளை முகாமையாளர், ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் என்று பலரும் கலந்து சிறப்பித்த இருந்தார்கள்.

விளையாட்டு உபகரணங்களை பெற்றுக் கொண்ட குழந்தைகள் குதூகலமாக காணப்பட்டார்கள். பெற்றோர்கள் பெரண்டினா நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்தார்கள .(05)

# குச்சவெளி பிரதேச வைத்தியசாலைக்கு ரூ. 50,000 பெறுமதியிலான மருந்துக்கள்

(எச்.சம். ஹலால்தீன் )

திருகோணமலை குச்சவெளி பிரதேச வைத்திய சாலையில் நிலவும் சிறு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக முபாரக் பவுண்டேசன் 50 ஆயிரம் ஷரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியது.

மருந்து பொருள்களைக் கையளிக்கும் நிகழ்வு குச்சவெளி வைத்திய சாலை வளாகத்தில் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச வைத்திய சாலையின் அதிகாரி வைத்தியர் மு.ஆ.ஆ.ஆ.பண்டாரவிடம் இம்மருந்து பொருள்கள் கையளிக்கப்பட்டன.

இதற்காக முபாரக் பவுண்டேஷன் அமைப்பின் அமைப்பின் உரிமையாளர் முபாரக் மக்கள் சார்பாகவும் வைத்தியசாலை சார்பாகவும் வைத்திய அதிகாரி மாயபண்டார நன்றியைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச வைத்திய அதிகாரி, குச்சவெளி கே.வி.சி அமைப்பின் உத்தியோகத்தர்கள், முபாரக் பவுண்டேஷன் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# பல்கலைக்கழகக் கல்வி வழிகாட்டல் செயலமர்வு




(நூருல் ஹுதா உமர்)

யுஎஸ்எவ் ஸ்ரீலங்கா அமைப்பு மற்றும் சாய்ந்தமருது இளங்கலை பட்டதாரி அமைப்புக்கள் இணைந்து 2023 உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இலவசமாக பல்கலைக்கழக கற்கை நெறிகளை தெரிவு செய்தல் மற்றும் விண்ணப்பிப்பது பற்றியும், கையேடுகள் பற்றியும் செயலமர்வு சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எப்.எச்.சிப்லியால் நடத்தப்பட்டது.

இந்தச் செயலமர்வில் சுமார் 120 இற்கு மேற்பட்ட இவ்வருடம் பல்கலைக்கழகத்திற்கு தகுதியான மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந் நிகழ்வில் யுஎஸ்எவ் ஸ்ரீலங்கா அமைப்பின் செயற்பாட்டாளர்கள், அமைப்பின் ஆலோசகர்கள் மற்றும் இளங்கலை பட்டதாரி அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சம்மாந்துறை, வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தி. பரிசளிப்பு விழா நிகழ்வு

(எம்.எம்.ஜெஸ்மின்)

சம்மாந்துறை ,வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை ஆராதனை மண்டபத்தில் அண்மையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதன் போது கடந்த வருடம் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை, க. பொ. த சாஃத பரீட்சை, க. பொ. த உயர் தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த சாதனையாளர்களை பாராட்டி கௌரவித்து விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம்.முனாஷிர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் க.பொ. த உயர் தரப் பரீட்சையில் நான்கு மாணவர்கள் 3ஏ சித்திகளைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த மாணவர்களும் இவ் விழாவில் கௌரவிக்கப்பட்டனர். (05)



# அம்பாறை மாவட்ட அரசியல் கட்டமைப்பு செயலிழந்துள்ளது

## பிள்ளையானின் ஆதங்கம் இது

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட அரசியல் கட்டமைப்பு செயலிழந்துள்ளது.எதிர்கட்சியில் இருந்து கொண்டு அம்பாறையில் ஒரு கணக்காளரைக்கூட நியமிக்க முடியாத அளவிற்கு அரசியல் இம்மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. ஒரு மக்கள் கூட்டத்தின் பிரதிநிதிகளாக ஆக்கப்பட்டுள்ள நாங்கள் அந்த மக்களின் அரசியல் பொருளாதார நிலைமைகளிலே ஆழமான அறிவு கொண்டு உழைத்து வருகின்றோம்.இந்த உழைப்பில் நாங்கள் அனைவரும் பங்குதாரர்களாக மாற வேண்டும்.இது தமிழரசுக் கட்சியின் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரக்காந்தன் தெரிவித்தார்.

சிவநேசத்துரை சந்திரக்காந்தன் எழுதிய ஈஸ்டர் படுகொலை இன-மத நல்லிணக்கம் அறிதலும் புரிதலும் தொடர்பிலான நூல் அறிமுகம் அம்பாறை மாவட்டம் காரைதீவு மத்திய கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போது அங்கு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்ட அவர் -

நான் அரசியல் கடலில் தற்செயலாக நீந்திக் கொண்டிருக்கின்ற ஒரு மனிதன். அல்லது இழுத்து வரப்பட்ட ஒரு மனிதன். எனக்கான அடையாளமும் அங்கீகாரமும் மட்டக்களப்பு மண்ணில் தான் கிடைத்திருக்கின்றது. எனக்கு கிடைத்த அடையாளமும் அங்கீகாரத்தையும் சரியாக பயன்படுத்தி மக்கள் பணியாக மாற்றி செய்துகாட்ட வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை தலையிலும் தோளிலும் சுமந்து கொண்டிருக்கின்றேன் என்பதை நீங்கள் எவரும் மறக்க மாட்டீர்கள். காரைதீவு பகுதியில் அதிகளவான வைத்தியர்கள் உள்ளார்கள். அங்கு அதிகளவான கார்கள் இருக்கின்றன.ஆனால் அங்கு பெற்றோல் நிரப்பும் நிலையம் இல்லை.இதுவும் ஓர் அரசியல்.இதுவும் எமது சமூகத்தின் பொருளாதார அரசியல். இவ்வாறு உள்ள நிலையில் அம்பாறை மாவட்ட மக்களின் ஆணையை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்ற கேள்வி எழுகின்றது.

இந்த ஆணையை சரியாக எப்படி பயன்படுத்துவது.இப்போது எமது கட்சிக்கு இம்மாவட்டத்தில் அரசியல் செய்கின்ற தேவை எழுந்திருக்கின்றது.தற்போது அம்பாறை மாவட்ட அரசியல் கட்டமைப்பு செயலிழந்துள்ளது.எதிர்கட்சியில் இருந்து கொண்டு அம்பாறையில் ஒரு கணக்காளரை கூட நியமிக்க முடியாத அளவிற்கு அரசியல் இம்மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றது.ஒரு மக்கள் கூட்டத்தின் பிரதிநிதிகளாக ஆக்கப்பட்டுள்ள நாங்கள் அந்த மக்களின் அரசியல் பொருளாதார நிலைமைகளிலே ஆழமான அறிவு கொண்டு உழைத்து வருகின்றோம்.

இந்த உழைப்பில் நாங்கள் அனைவரும் பங்குதாரர்களாக மாற வேண்டும். இது தமிழரசுக் கட்சியின் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. எனது பாட்டனாரும் அம்மாவும் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தவர்கள் தான். அதற்காக எனது பாட்டனார் இறந்து விட்டார் என்பதற்காக அவரது சடலத்தை ஒரு நாளைக்கு மேல் வைத்துக் கொண்டு அழுது கொண்டிருக்க முடியாது.

சடலத்தை அடக்கம் செய்துவிட்டு எமது பிள்ளைக்கான பணியினை முன்னெடுக்க வேண்டும்.அப்படித்தான் எமது அரசியலும் மாற்றப்பட வேண்டும்.காலம் காலமாக வந்தோம் என்பதற்காகவும் பாரம்பரியமாக பின்பற்றி வருகின்றோம் என்பதற்காகவும் எல்லாவற்றையும் இழந்து நிற்கின்ற போதும் சரியான தீர்மானங்களை எடுக்க முடியாத மக்களை செல்வநாயகம் கூறியது போன்று கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்பதாகும்.அல்லது வைரமுத்து கூறியது போன்று பட்டு வேட்டி கனவினை பேச்சிலே ஆசை காட்டி மிதக்க விட்டுவிட்டு இங்கு கட்டி இருக்கின்ற கோவணமும் களவாடப்படுகின்ற சூழ்நிலையில் அரசியல் பேசிச் சென்றால் காலத்திற்கு ஒரு முறை பிள்ளையான் வருவார்.அல்லது அடைக்கலநாதன் கல்முனையை பார்த்து விட்டு 2 நிமிடம் நாடாளுமன்றத்தில் பேசிச் செல்வார்.அல்லது நல்லாட்சியில் மற்றுமொருவர் வாக்குறுதி வழங்குவார். அல்லது முன்னாள் எம்.பிக்கள் ஜனாதிபதியை சந்திப்பார்கள்.அவ்வாறு அம்பாறை மாவட்ட அரசியல் பாராம்பரியத்தை எவரும் மாற்ற நினைத்தல் அது முடியாத காரியமாகும்.

எனவே ஒரு பொறுப்புள்ள கட் சியின் தலைவனாக நான் உங்களிடம் சிறப்பாக சிந்திக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன்.எமது சமூகப் பிரிவினை, பிரதேச பிரிவினைகளை மாற்றி எவ்வாறு நாங்கள் திட்டமிடப் போகின்றோம்.அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலுக்கு எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றோம் என்பதை சிந்திக்க வேண்டும்.அதற்கு எப்படி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும். ஏனைய கட்சிகளையும் இப்பொது வேலைத்திட்டத்தில் எவ்வாறு இணைக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டும். அந்த புள்ளியை எமது கட்சி நிச்சயமாக சந்திக்கும்.இதன் ஊடாக தூய்மையான அரசியலை எம்மால் முன்னெடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் இம்முறை உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவ மாணவிகளும் பொன்னாடை போர்த்தப்பட்டு இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான பி.பிரசாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் காரைதீவு அமைப்பாளர் ரி.ஞானேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை நிறைவேற்று பொறியியலாளர் ஏ.லிங்கேஸ்வரன், உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்த கொண்டதுடன் குறித்த நூல் அறிமுகம் அம்பாறை மாவட்டத்தின் பாண்டிருப்பு ,காரைதீவு, ஆலையடி வேம்பு, பகுதியில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# கிண்ணியாவில் தேசிய மக்கள் சக்தியின் பிரசாரமும் துண்டுப்பிரசுர விநியோகமும்

(எச் எம் ஹலால்தீன்)

தேசிய மக்கள் சக்தியின் பிரசார நடவடிக்கையும் துண்டு பிரசுர விநியோகமும் வாகனங்களுக்கான ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்வும் ஊர்வலமும் ஞாயிற்றுக்கிழமை கிண்ணியாவில் இடம் பெற்றது.

கிண்ணியா பாலத்தில் இருந்து ஆரம்பித்த ஊர்வலமானது குட்டி கராட்சி சந்தி வரை சென்று மீண்டும் பழைய வைத்தியசாலைச் சந்தியை சென்றடைந்தது.

மக்கள் மத்தியில் கட்சியின் கொள்கை, எதிர்கால திட்டம் என்பன பற்றி இதன் போது மக்கள் மத்தியில் விளக்கமளிக்கப்பட்டனர்.

அத்துடன் அவர்களுக்கான துண்டுபிரசுரங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர் சட்டத்தரணி அருன் ஹேமச்சந்திர, கன்னியா, மூதூர், திருகோணமலை முள்ளிப் பொத்தானை, தம்லகமம், கந்தளாய் உள்ளிட்ட முதலான இடங்களைச் சேர்ந்த இணைப்பாளர்களும் கலந்து கொண்டனர். (05)

# வெலிகந்த ஆதார வைத்தியசாலை அத்தியட்சகராக சபியுதீன் நிறமனம்

(எம்.எம்.ஜெஸ்மின்)

பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்தை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக ஏறாவூரைச் சேர்ந்த வைத்தியர் தாஹிரா சபியுதீன் நியமனம் பெற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.



ஏறாவூர் நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பொறியிலாளர் எஸ்.எல். ஹாலிதீனின் சகோதரியுமாவார்.(05)

# இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் வாழ்த்து



இந்தியாவின் மக்களைவை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்று, மூன்றாவது முறையும் இந்திய பிரதமராக பதவியேற்றுள்ள நரேந்திர மோடிக்கு கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் அவர் தெரி வித்திருப்பவை வருமாறு -

பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியில் இந்திய மக்களுக்காக பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவை பொருளாதார ரீதியில் வலுவான ஒரு நாடாக அவர் கட்டியமைத்துள்ளார்.

அதேபோல் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது இந்திய அரசு கடன் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி இலங்கைக்கு கைகொடுத்துள்ளது. மேலும், வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.

இந்தியாவில் 3 ஆவது முறையாக ஆட்சி அமைத்து மீண்டும் அதிகாரத்தில் அமர்ந்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. உலகத்தின் வலிமை மிக்க தலைவராகவும் அவர் மாறியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். (05)








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.06.2024இல் வெளியிடப்பெற்றது